IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
IA.No.538/2019 in OS.No. 68/2012
Deposition of witness for CW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலாஜி | Caste | : | |
| Father Name | : | கணேசன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of October, 2025.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நீதிமன்றம் எனக்கு warrant எதற்காக கொடுக்கப்பட்டது என்ற நோக்கம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். warrant ல் A அட்டவணை சொத்துக்கு என்ன சர்வே எண் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் warrant ல் A அட்டவணை என்று குறிப்பிடவில்லை சொத்து விவரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது கொல்லபள்ளி கிராம அரசு புன்செய் சர்வே எண்.42/3 உட்பிரிவு எண்கள்.42/3A, 42/4B மற்றும் இன்னொரு அயிட்ட சொத்தான சர்வே எண். 42/3 அதன் உட்பிரிவு 42/3B என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண். 42/3B ல் எத்தனை சென்ட் இருந்தது என்று சொன்னால் 38.5 ஏர்ஸ் (95 சென்ட்) நிலமாக இருந்து புல எண்.42/3 பி எனவும் 42/3 பி2 எனவும் பிரிக்கப்பட்டிருந்தது.

2. மேற்படி 42/3 பி யை நான் முழுவதுமாக அளந்தேனா என்று சொன்னால் அளந்தேன். மேற்படி சர்வே எண்ணில் 38.5 ஏர்ஸ் இருந்தது என்று சொன்னால் சரிதானா என்றால் மேற்படி சர்வே எண்ணானது இரண்டாக பிரிந்து இருந்தது. நான் 42/3 பி ஐ அளந்து இருந்தால் வரைபடத்தில் குறிப்பிட்டு இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பிரச்சனைக்குறிய பகுதி எது என்று பார்த்து அளவீடு செய்து என்னுடைய அறிக்கையில் குறியீடு செய்துள்ளேன்.

3. சர்வே எண். 42/3பி ல் பிரதிவாதிகள் எவ்வளவு பகுதியை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் நான் 452 ச.அ என்று குறிப்பிட்டுள்ளேன். ஆனால் சென்ட் கணக்கில் குறிப்பிடவில்லை. பிரதிவாதிகளினுடைய வீடு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் என்னுடைய அறிக்கையில் குறிப்பிடவில்லை. ஆக்கிரமிப்பு செய்த பகுதியை மட்டும்தான் குறிப்பிட்டுள்ளேன்.

4. சர்வே எண்.42/3பி ல் வீடு இருந்ததா அல்லது மரங்கள் இருந்ததா என்று சொன்னால் நான் சொல்லியுள்ள விவரங்கள் பொதுவானவை குறிப்பிட்டு சொல்லவில்லை. சர்வே எண்.42/3பி ல் வீடு இருந்ததா என்றால் மேற்படி சர்வே எண்.42/3பி இரண்டாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதால் 42/3பி2 ல்தான் வீடு இருந்தது. நான் தவறான அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI